**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093894

1. District மாவட்டம் : Madurai PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 8/19 Date: நாள் 15.03.19

2. (i) Act சட்டம்: Criminal Procedure code Sections பிரிவுகள்: 102 CrPC r/w
(ii) Act சட்டம்: Prevention of corruption Act Sections பிரிவுகள்: 7 of Prevention of
(iii) Act சட்டம்: 1988 as amended by PC (Amendment) Sections பிரிவுகள்: corruption Act 1988 as amended by PC (Amendment) Act 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : Act 2018

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 01.02.19 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 1400 hrs Time to : நேரம் வரை 2100 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.02.2019 Time : நேரம் 2300 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 15.03.2019 Time : நேரம் 1630 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 40 Km, South
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o the motor vehicle Inspector, Unit office, Poonga Nagar, AlamPatti, T-Kallupatti main Road, Thirumangalam Taluk, madurai District
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. Thirumalai (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Ramakrishnan
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் (g) Address : முகவரி District Deputy Inspection cell officer, madurai District

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) (1) Tmt J. Poornalatha, age 36/19, W/o Karthikeyan motor vehicle Inspector, Grade I (2) Tr. G. Shanmugakani, age 50/19 S/o Guru Samy, Assistant (3) Tr. G. Venkateswaran age 25/19, S/o Guru Samy, ELCOT contract staff (4) Tr T. Vijayan age 28/19 S/o Thangavel, (Private Individual) O/o the MVI unit office, Alampatti, Thirumangalam

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
This case was registered after getting instruction from DVAC and hence no delay.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21 3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Three seperate sheets in Page No's 3 to 7 were enclosed herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / ~~directed~~ A. AMBROSE JEYARAJA Rank INSPECTOR to take up the Investigation / Refused Investigation / transferred to PS........................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A. Kannan
INSPR V-RAC

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 15/3/19

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

15.03.2019 at 1800 hrs.

Name: பெயர் A. KANNAN
Rank: நிலை Inspector No. எண் V-RAC Madurai

Submitted,

இன்று 15.03.2019-ம் தேதி, காவல் ஆய்வாளர் அ.கண்ணன் ஆகிய நான், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு. R. திருமலை அவர்கள் மதுரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலக ந.க.எண். I1/1006/2019 நாள் : 01.02.2019-ன் படி அளித்த புகார் மனுவை, மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள் பார்வையிட்டு இன்று 15.03.2019-ம் தேதி காலை 10.00 மணிக்கு உத்தரவிட்டதின் பேரில், மேற்படி புகார்மனு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட வாக்குமூலங்கள், ஆவணங்கள் ஆகியவற்றை பார்வையிட்டேன். புகார்மனுவில் உள்ள விபரம் பின்வருமாறு. அனுப்புநர் திரு. R. திருமலை, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மதுரை மாவட்டம். பெறுநர் காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க. எண். I1 /1006/ 2019 நாள் : 01.02.2019 அய்யா, பொருள் : திடீர் இணை ஆய்வு -மதுரை மாவட்டம் திருமங்கலம் தாலுகா, ஆலம்பட்டி, பூங்கா நகர், டி.கல்லுப்பட்டி மெயின் ரோட்டில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்தில் 01.02.2019-ம் தேதி 14.00 மணி முதல் 21.00 மணி வரை திடீர் இணை ஆய்வு மேற்கொண்டது - பணம் ரூ.1,48,300/- மற்றும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது - மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது - தொடர்பாக. பார்வை : மதுரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் செயல்முறை நடவடிக்கைகள் நாள் : 01.02.2019. இன்று 01.02.2019-ம் தேதி, மதுரை மாவட்டம் திருமங்கலம் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்தில் லைசென்ஸ் வழங்கவும், புதுப்பிக்கவும், புதிய வாகனங்களை பதிவு செய்வதற்கும் லஞ்சம் பெறுவதாகக் கிடைத்த இரகசிய தகவலின் பேரில், இன்று மதியம் 14.00 மணிக்கு, நானும், மதுரை ஊ.த.க. பிரிவு காவல் ஆய்வாளர்கள் மற்றும் பார்ட்டி சகிதம் திருமங்கலம் - இராஜபாளையம் செல்லும் நெடுஞ்சாலையில் ஆலம்பட்டி பூங்கா நகர் பகுதியில் ரோட்டின் மேற்கே உள்ள திருமங்கலம் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்திற்கு சென்று திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த திடீர் இணை ஆய்வின் போது, திருமங்கலம் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்தில், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 திருமதி. பூர்ணலதா என்பவர் அமர்ந்து இருந்தார். அவர்களிடம் என்னையும் என்னுடன் வந்த மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களையும் அறிமுகம் செய்து கொண்டு அலுவலகத்தை திடீர் இணை ஆய்வு செய்வதற்கு வந்துள்ளதாக தெரிவித்தேன். மேற்படி

அலுவலரிடம் அலுவலர் கையிருப்பு பணப் பதிவேட்டை வாங்கிப் பார்த்த போது அதில் திருமதி.பூர்ணலதா இன்று 01.02.2019-ம் தேதியன்று ரூ.1,100/- சொந்தப்பணம் வைத்துள்ளதாகவும், உதவியாளர் திரு.கு.சண்முகக்கனி ரூ.290/- வைத்திருப்பதாகவும் பதிவு செய்யப்பட்டிருந்தது. மேலும், மேற்படி இரண்டு அலுவலர்கள் தவிர வேறு யாரும் அரசு ஊழியர்கள் இல்லை என்றும் தெரிவித்தார். தொடர்ந்து, மேற்படி அலுவலகத்தின் உள்ளே இருந்தவர்கள் அனைவரையும் விசாரித்து சோதனை செய்யப்பட்டது. அப்போது, மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.பூர்ணலதாவின் கைப்பையைச் சோதனையிட்ட போது அதில் ரூ.1,100/- இருந்தது. அந்தப் பணம் சொந்தப் பணம் என்று சொன்னதால் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. தொடர்ந்து அந்த அறையைச் சோதனையிட்ட போது அவர் அமர்ந்திருந்த இருக்கைக்கு பின்புறமுள்ள மேசையின் கீழே இருந்த சிவப்பு நிற குப்பைக் கூடைக்குள்ளே கத்தையாகக் கிடந்த பணத்தை எடுத்து எண்ணிப் பார்த்த போது அதில் ரூ.32,000/- இருந்தது. மேலும், அவரது இருக்கையின் வலதுபுறம் இருந்த நீளமான இரும்பு பெஞ்சின் மேல் அடுக்கி வைக்கப்பட்டிருந்த கோப்புகளுக்கு அடியில் கத்தையாக இருந்த பணத்தை எடுத்து எண்ணிப் பார்த்ததில் அதில் ரூ.30,000/- இருந்தது. தொடர்ந்து மோட்டார் வாகன ஆய்வாளர் அறைக்கு கிழக்கே உள்ள அறையில், விபத்து வாகன ஆவணங்கள் மற்றும் கோப்புகள் வைக்கப்பட்டிருந்த அறையைச் சோதனையிட்ட போது சுமார் 5 அடி உயரமுள்ள இரும்பு ரேக்கின் மேல் தட்டில் வைக்கப்பட்டிருந்த கோப்புகளுக்கு அடியில் கத்தையாக இருந்த பணத்தை எடுத்து எண்ணிப் பார்க்க அதில் ரூ.17,000/- இருந்தது. மேற்படி 3 இடங்களில் இருந்து கைப்பற்றப்பட்ட மொத்தப் பணம் ரூ.79,000/- குறித்து திருமதி. பூர்ணலதாவிடம் கேட்ட போது அந்தப் பணத்தை யார் வைத்தார்கள் என்று தனக்கு எதுவும் தெரியாது என்று கூறிவிட்டார். தொடர்ந்து, மோட்டார் வாகன ஆய்வாளர் அறைக்கு வடக்கே இருந்த 3 அறைகளைச் சோதனையிட்ட போது, முதல் அறையில் இருந்த உதவியாளர் திரு.சண்முகக்கனி என்பவரை சோதனையிட்டதில் அவரிடம் ரூ.250/- பணம் இருந்தது. அந்த பணம் குறித்து கேட்ட போது, தனது சொந்தப்பணம் என்று கூறியதால் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும், அவரது மேஜை முதல் டிராயரை சோதனை செய்தபோது அதில் ரூ.50,370/- இருந்தது. அதைப்பற்றி கேட்டபோது மேற்படி தொகை இன்று 01.02.19-ம் தேதி வசூலான அரசுக் கட்டணம் என்று தெரிவித்தார். அதுகுறித்து விசாரித்த போது கணிப்பொறியில் பதிவான கட்டண விவரங்களை பிரிண்ட் எடுத்து கொடுத்தார். அதனை ஒப்பிட்டுப் பார்த்த போது சரியாக இருந்தது. தொடர்ந்து, அவரது அறையை சோதனையிட்டதில், இரும்பு பீரோவின் கீழே உள்ள கடைசி தட்டில் அடுக்கி இருந்த பதிவேடுகளின் கீழே கத்தையாக சுருட்டி வைக்கப்பட்டிருந்த பணத்தை எடுத்து

எண்ணிப் பார்த்த போது அதில் ரூ.11,000/- இருந்தது. மேற்படி அறைக்கு கிழக்கே உள்ள கணிப்பொறி செர்வர் அறையை சோதனை செய்ததில் அங்கிருந்த இரும்பு பெஞ்சின் மேலே அடுக்கி வைக்கப்பட்டிருந்த கோப்புகளின் கீழே கத்தையாக வைக்கப்பட்டிருந்த பணத்தை எடுத்து எண்ணிப் பார்க்க அதில் ரூ.5,000/- இருந்தது. மேற்படி இரண்டு இடங்களிலும் இருந்து கைப்பற்றப்பட்ட பணம் **ரூ.16,000/-** குறித்து உதவியாளர் திரு. சண்முகக் கனியிடமும், திருமதி.பூர்ணலதாவிடமும் கேட்ட போது அந்தப் பணம் குறித்து தங்களுக்கு எதுவும் தெரியாது என்று கூறிவிட்டனர். தொடர்ந்து, திரு.சண்முகக்கனி அமர்ந்திருந்த அறைக்கு வடக்கே இருந்த உதவியாளர் அறையில் உள்ள ஒரு மேஜையில் கணிப்பொறியும், 5 ½ அடி பீரோ - ஒன்று இருந்தது. அதை சோதனையிட்டதில் பணம் ஏதும் இல்லை. அந்த அறைக்கு வடக்கே உள்ள இளநிலை உதவியாளர் அறையில் அமர்ந்திருந்த திரு.விஜயன் என்பவரை விசாரித்த போது, தான் திருமதி.பூர்ணலதாவிடம் கடந்த இரண்டு மாதமாக அரசு வாகனம் எண் TN 58 G 0148 பொலிரோ ஜீப்பின் டிரைவராக தற்காலிகமாக பணியாற்றுவதாகத் தெரிவித்தார். அவரைச் சோதனையிட்டதில் அவரது சட்டைப் பையில் ரூ.450/- இருந்தது. அதுகுறித்து அவரிடம் கேட்ட போது தனது சொந்தப் பணம் என்று கூறியதால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவர் அமர்ந்திருந்த இருக்கைக்கு முன்புறமுள்ள கணிப்பொறி மேசைக்கு கீழே அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆவணங்களின் அடியில் ஒரு காகிதத்தில் சுற்றி வைக்கப்பட்டிருந்த பணக்கத்தையை எடுத்து எண்ணிப் பார்க்க அதில் **ரூ.14,000/-** இருந்தது. அந்தப் பணத்தைச் சுற்றி வைத்திருந்த வெள்ளைப் பேப்பரில் 31.01.19 தேதியிட்டு அதில் ரூ.14,290/-க்கு இருபுறமும் கணக்கு எழுதப்பட்டிருந்தது. மேற்படி பணம் மற்றும் குறிப்புகள் எழுதப்பட்ட காகிதம் குறித்து திரு.விஜயனிடம் கேட்ட போது தனக்கு எதுவும் தெரியாது என்று கூறினார். அந்த கட்டிடத்தின் கடைசியில் இருந்த எல்காட் பதிவு அறையில் அலுவலில் இருந்த தனியார் நிறுவன ஊழியர் திரு.வெங்கடேஷ் என்பவரை சோதனையிட்டதில் அவரது சட்டைப் பையில் ரூ.15,160/ இருந்தது. அந்தப் பணம் குறித்து கேட்ட போது, தனது அக்காவின் அறுவை சிகிச்சைக்காக சீட்டுக் கட்டியிருந்த பணத்தைப் பெற்று வந்ததாகக் கூறினார். விசாரணையில் அவர் கூறிய விவரங்கள் உண்மை எனத் தெரிந்ததால் மேற்படி பணம் திரு.வெங்கடேஷிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. தொடர்ந்து அந்த அறையைச் சோதனையிட்ட போது திரு.வெங்கடேஷ் அமர்ந்திருந்த இருக்கைக்கு முன்புறமுள்ள கணிப்பொறி மேசைக்கு கீழே அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆவணங்களின் அடியில் இருந்த பணக்கத்தையை எடுத்து எண்ணிப் பார்க்க அதில் **ரூ.29,000/-** இருந்தது. மேற்படி பணம் குறித்து திரு.வெங்கடேஷிடம் கேட்ட போது அந்தப் பணம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது

என்று கூறினார். மேலும், மேற்படி அலுவலக வளாகத்தைச் சுற்றி போலிஸ் பார்ட்டியினர் தேடி பார்த்தபோது அலுவலகத்தின் முன்புறம் உள்ள காம்பவுண்ட் சுவருக்கும் இளநிலை உதவியாளர் அறையில் திரு. விஜயன் அமர்ந்திருந்த ஜன்னலுக்கும் இடையே உள்ள தளத்தில் சுவற்றை ஒட்டி கிடந்த பணச்சுருளை எடுத்து எண்ணிப் பார்த்ததில் அதில் ரூ.6,600/- இருந்தது. மேலும் அலுவலகத்தின் சர்வர் அறையிலுள்ள சிறிய ஜன்னலுக்கு நேர் பின்புறம் அலுவலகத்தின் வெளியே கிழக்கு சுவரை ஒட்டிய மண் தரையில் பணச்சுருளை எடுத்து எண்ணிப் பார்த்ததில் அதில் ரூ.3,700/- இருந்தது. மேற்படி அலுவலகத்தின் உள்ளேயும், வெளியேயும் சோதனையிட்டதில், கணக்கில் வராத பணம் மொத்தம் ரூ.1,48,300/- கைப்பற்றப்பட்டது. மேலும் சோதனையின் போது மேற்படி அலுவலகத்தின் உள்ளே இருந்த பின்வரும் நபர்களை விசாரணை செய்த போது (1) விநாயகா டிரைவிங் ஸ்கூல் டிரைவரான கண்ணன் ஆஜர் செய்த பணம் ரூ.870/-, (2) டி.கிருஷ்ணாபுரத்தை சேர்ந்த அழகுராஜ் ஆஜர் செய்த பணம் ரூ.250/-, (3) லெட்சுமி டிரைவிங் ஸ்கூலில் பணிபுரியும் ரத்தினவேல் பாண்டியன் ஆஜர் செய்த பணம் ரூ.260/-, (4) வின்ஸி டிரைவிங் ஸ்கூலில் பணிபுரியும் நாகராஜ் ஆஜர் செய்த பணம் ரூ.500/-, (5) சேது டிரைவிங் ஸ்கூல் உரிமையாளரான சேதுராமன் ஆஜர் செய்த பணம் ரூ.470/-, (6) சிம்மக்கல் அழகேந்திரா ஆட்டோ ஷோரூமில் பணிபுரியும் சதீஸ்குமார் ஆஜர் செய்த பணம் ரூ.360/-, (7) மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு எதிரே ஸ்டிக்கர் கடை வைத்திருக்கும் சிவக்குமார் ஆஜர் செய்த பணம் ரூ.460/-, (8) செங்கப்படையைச் சேர்ந்த குமரகுரு ஆஜர் செய்த பணம் ரூ.15,450/-மற்றும் அவரது ஓட்டுநர் செல்வகுமார் ஆஜர் செய்த பணம் ரூ.380/- ஆகியவை குறித்து விசாரித்து சோதனை செய்த போது அவர்கள் ஆஜர் செய்த பணம் சொந்த பணம் என குறிப்பிட்டதால் அவை அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் போட்டா ஷாப் டிசைன் பணி செய்யும் சிவராஜ் என்பவரை சோதனை செய்ய அவரிடம் பணம் ஏதுமில்லை. மேலும், அலுவலகத்திற்கு பின்புறம் நின்றுகொண்டிருந்த மோட்டார் வாகன ஆய்வாளரின் நான்கு சக்கர அரசு வாகனம் TN 58 G 0148 என்ற Bolero வாகனத்தை சோதனை செய்த போது, அதில் கருப்பு நிற லெதர் உறை போடப்பட்ட 2017-ம் ஆண்டுக்கான Velammal Educational Trust என அச்சிடிப்பட்ட சில பக்கங்கள் எழுதப்பட்ட திருமதி. பூர்ணலதாவின் டைரி காணப்பட்டது. அந்த டைரியின் முதல் பக்கத்தில் சில குறிப்புகள் எழுதப்பட்ட மூன்று துண்டுச்சீட்டுக்கள் குறித்து திருமதி. பூர்ணலதா அவர்களிடம் கேட்ட போது, தனது டைரிக்குள் மேற்கண்ட குறிப்புச்சீட்டுகள் எப்படி வந்தது என தெரியவில்லை என்று தெரிவித்தார். மேலும், மேற்படி அலுவலர்களிடமும், அங்கிருந்த திருமங்கலம் பகுதியைச் சேர்ந்த வாகன பயிற்சி பள்ளிகளை சார்ந்த நபர்களிடமும்

விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுசெய்தேன். மேற்படி அலுவலகத்தை சோதனை செய்ததில் கிடைக்கப்பெற்ற கணக்கில் வராத பணம் **ரூ.1,48,300/-** (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பத்து எட்டாயிரத்து முந்நூறு மட்டும்) மற்றும் 11 ஆவணங்களை விசாரணைக்காக கைப்பற்றினேன். மேற்படி திடீர் இணை ஆய்வு சம்மந்தமாக இன்று 01.02.2019-ம் தேதி பகல் 14.00 மணி முதல் இரவு 21.00 மணி வரை திடீர் இணை ஆய்வு நடவடிக்கை குறிப்பு தயாரிக்கப்பட்டது. மேற்படி நடவடிக்கை குறிப்பு, கைப்பற்றப்பட்ட மொத்தப்பணம் **ரூ.1,48,300/-**, 11 ஆவணங்கள் மற்றும் அலுவலர்கள் அளித்த வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து மேல் நடவடிக்கை எடுக்கும்பொருட்டு தங்களுக்கு அனுப்பி வைக்கிறேன். ஒப்பம்/- (R. திருமலை) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மதுரை மாவட்டம், மதுரை. இணைப்பு : மேற்கண்டவாறு.

Received ஒப்பம்/- (M. சத்தியசீலன்), DSP, V&AC, Madurai, 01.02.2019. 10.00 Hrs / 15.03.2019. As per the DVAC Memo in No:-29247/VAC-4/18 dated : 12.03.2019, Inspector Tr. Kannan to register a regular case on the above complaint and to handover the FIR & connected files to Inspector Tr. Ambrose Jeyaraja, V&AC, Madurai for further investigation. ஒப்பம்/- (M. சத்தியசீலன்), DSP, V&AC, Madurai, 15.03.2019.

Sir, Received report along with documents and registered a case in Madurai V&AC Cr.No.08/2019 u/s 102 Cr.P.C r/w 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 on 15.03.2019 at 16.30 hrs. ஒப்பம்/- (A. Kannan), Inspr / V&AC, 15/3/19.

The original FIR along with report of Tr. R. Thirumalai, Joint Surprise Check Mahazar dated : 01.02.2019 and 13 statements are submitted to the Hon'ble Special Judge, Special Court for the Trial of Cases under PC Act, Madurai and other copies were sent to the officers concerned.

A. Kannan
INSPR/V&AC
15/3/19.